வாதிகள் அச்சுத் தப்பையும் ஓர் வியாஜமாகக் கொள்ளுவார்க ளென்பதற்கு இதுவும் ஓர் சான்றா மென்க.

"வேதத்திற் குட் பட்ட எந் நூலும் எச் சமயமும் தன் னூ லாகக் கொள்ளும் தெய்வப் புலமைத் திருவள்ளுவ தேவ ரெழுதிய குறட்பா' என்று வழு வுற வரைந்தார். 'எந் நூலும் எச் சமயமும் தன்னகத்தேகொள்ளும்' என் றொரு வரிதானும் கசடற வெழுதக் கற்காத இவர் குறட்பாவுக்குப் பொருள் காணும் மதுகை யுடையார் கொல்!" என்றார்.

ஓர் நாகைவாதி யென்பார் வேதத்திற் குட்பட்ட எந்நூலின் கருத்தும், எச் சமயக் கருத்தும் தன் னூலின் கருத்தாகவே இருக்கு மன்றி வேறு நூலின் கருத்தாக விரா வென்னுங் கருத் தற 'வேதத்திற் குட் பட்ட எந்நூலும் எச் சமயமும் தன் னூலாகக் கொள்ளும்' என் றெழுதியதி லுள்ள மேம் பாட்டை ய[illegible]ம் விரகின்றி, 'எந் நூலும் எச்சமயமும் தன்னகத்தே கொள்ளும் என்றொரு வரிதானும் கசடற எழுதக் கற்காத இவர்' என்று இப் பூர்வபக்ஷியா ரெழுதி, வேறு நூலின் கருத்தையும், வேறு சமயத்தின் கருத்தையும் தன்னிடத்திற் கொண்டதே யன்றி, அத னிடத்தில் அக் கருத்துகளை யெடுத்து விடின், அதற்கு (திருக் குறளுக்கு) ஏற்ற மின் றென்னும் கருத் தமைய (எப்பொருளும் மாரு மியல்பினை றிவுறச் செப்பிய) திருவள்ளுவரது திருக் குறளை யிகழ்ந்தது மதியாமோ? ஓர் நாகை வாதியார் எழுதிய சொற்றொடரின் பொரு ளமைதியையே யறியாத விவர் அவரோடு சாஸ்திர வாதஞ் செய்யப் புறப் பட்டால்,

"கற்றாருரைக்கும் கசடறு[illegible]ங்கேள்வி
பற்றாது தன்னெஞ்சு தைத்த[illegible]ன் - மற்றுமோர்
தன்போ லொருவன் முகநோ[illegible]ச் தானுமோர்
புன்கோட்டி கொள்ளுமாங் கீழ்"

என வுள்ள நாலடிச் செய்யு[illegible] இனமா யிருக்கிற தன்றி வேறென்னை?

"உருவக வுவமையிற் றிணைசினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே"

என்னும் சூத்திரத்தில் "பிறவும்" என்பதினால் "அருளினனை [illegible] வினையை [illegible] றொரு வினையாற் கூறுதலும்" என்று இல[illegible] [illegible]கையாற் [illegible]ள்ளக் கிடக்கும் வினை யிலக்கண மறியு மாற்ற லின்றி "திரு வள்ளுவ தேவ ரெழுதிய" என்று ஓர் நாகை வாதியார் வரைந்ததில் தவறு காண வந்து, "திருவள்ளுவ தேவர் அருளிய நூல் என்னாது 'எழுதிய நூல்' என்றால் உய்தி யில்லதோர் ற்றமாம்" என்றார்.

'அருளிய' என்றால் அது ஈந்த அல்லது எழுதிய வென்று இலக்கண வகையால் பொருள் கொள்வதற்கு யாதோ ராசங்கையு மின்றி யிருக்க, இப் பூர்வபக்ஷியார் 'அருளிய நூல் என்னாது எழுதிய நூல் என்றல் உய்தி யில்லதோர் குற்றமாம்' எனல் சொல் இலக்கண மறியாக் குற்றமன்றி வேறியாதாம்! 'அருளிய' என்பது 'சொல்லிய' அல்லது எழுதிய என்றே பொருள் கொள்ள விருக்க, 'இவர் எழுதிய' என்பது 'உய்தி யில்ல தோர் குற்ற மாம்' எனல் எவ் விலக்கணங் கொண்டோ? ஓர் நாகை வாதியார் 'அருளிய' என்னாது 'எழுதிய' என்று வரைந்ததற்கு ஏது யாதோ எனின், தெய்வப் புலமைத் திருவள்ளுவ தேவர், தாம் அருளிய (சொல்லிய) நூலைத் தங் கைப்படவே எழுதி யுலகிற்கு உபகரித்தார் என்னுஞ் சிறப்புத் தோன்ற 'திருவள்ளுவ தேவ ரெழுதிய' என்றா ரென்க.

"நானே பிரமம்' என்னுங் கொள்கையுடைய ராதலால், பிரம மாகிய தாம் ஏனைப் பிரமத்தை உயர்த்திக் கூறத் துணிகின் றிலர் போலும்!" என்றார்.

நான் என்பதற்குப் பொருள் முத்தியில் சீவ சாட்சியா யுள்ள கூடஸ்தன் என்றும், அக் கூடஸ்தனே பிரமம் என்றும் வேதவேதாந் தங்கள் கூறுவதைப் பன்முறை "வேதாந்த சங்கை நிவாரணம்" "அத்வைத தூஷண பரிகாரம்" "சித்தாந்திகளும் ஏகான்மவாதிகளே" "சங்கரா சாரியர் அவதார மகிமை" முதலிய நூல்களிலும், பிரம வித்தியா முதலிய பத்திரிகைகளிலும் யுக்தி யநுபவத்தோ டெழுதி யிருப்பதற் கெல்லாம் பதில் விடுக்கும் வலிமை யின்றிப் பதுங்கி யொளிந்த மாயா வாத துவித தாந்திரீக பாஷாண்டிகள் "பழைய கறுப்பனே கறுப்பன்" என்றவாறு அத்வைதிகள் நான் என்பதற்குப் பொருள சீவனைக் கொள்ளுகிறார்க ளென்று கூறல் விவேக முண்டமையாலன்றோ? நாகை வாதியார் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் என்று குறளாசிரியரை யுயர்த்தியே கூறி யிருக்க, இவர், உயர்த்திக் கூறத் துணிகின்றிலர் என் றுரைத்தல்,

"பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்"

என்ற செய்யுளுக்கு இலக்கா யிருக்கிற தென்க.

சோமசுந்தர நாயகர் "எழுத்தெல்லா மென்றபோது அகரமும் அடங்கி நிற்கவும், அதனை வேறுபோல அகர முதலவென்று வந்ததென்னை யெனின்" என்றோர் ராசங்கை எழுப்பி, (மாந்தர் வந் தார், மன்னனும் வந்தான் என்று, சிறப்புப் பற்றி மாந்தரில் ஒருவனாகிய மன்னனை மீண்டும் சொல்வது போன்று; எழுத்தெல்லா மென்ற போது அகரமும் அடங்கி நிற்க அவ் வகரத்தை மீண்டும் சிறப்புப் பற்றி யென்று கூறும் ஊகமின்றி), அதற்குத்

ந்த விடை யிறுக்காது, "தமிழே யன்றி வடபாஷையினு முதலாதல் பற்றியாம்" என்று போலி விடை யிறுத்ததைப் பற்றி நாகை ஜோதியார் பிரமத்தி னின்றும் எல்லாம் பிறந்தன என்புழி எல்லாம் என்பதில் பிரமம் அடங்க வில்லை யென்றும், அரசன் முன் னிலையில் யாவரும் வணங்க வேண்டு மெனின் யாவரும் என்பதில் அரசன் அடங்க வில்லை யென்றும் இங்ஙனமே எழுத் தெல்லாம் அகாமுதல என்புழி எழுத்தெல்லா மென்பதில் அகர மடங்க வில்லை யென்றுஞ் சீரிய ஞாயத்தோடு மறுத்ததற்கு யாதும் பதில் பேசாமல் "எழுத்து என்றது இரட்டுற மொழித லென்னும் நயத்தால் இரு பொருள் பட்டு, ஒன்று அகரமுதல் னகர விறுவாய் முப்பதென்று மற்றொன்று சினையாகு பெயராய் எழுத்தினு ணாக்கப்படும் பாஷை யென்றும் கொள்ளக் கிடத்தலின் ......'எழுத்து' என்றதற்குப் பாஷை யென்றும் கண்டு 'தமிழே யன்றி வட பாஷையினு முதலாதல் பற்றியாம்' என்று அதற்கு விடையும் தாமே எழுதி யுண்மை ...ளித்தார்கள்" என்றார். 'எழுத்து என்றது இரட்டுற மொழித லென்னும் நயத்தால் வடபாஷையினு முதலாதல பற்றியாம்' என்று கூறி விட்டதினால் அகரம் ஏனை யெழுத்துகளுக்கு முதலா யிருக்கிறது என்று பெறப்பட வில்லையே. அகரம் ஏனை யெழுத்துகளுக்கு முதலா யிருக்கிற தென்பதற்குத் தகுதியான சமாதான யெழுதத் தெரியாமல் குளறுபடை செய்ததோடு 'எழுத்து' என்பது சினை யாகுபெயராய்ப் பாஷை யென்றுங் கொள்ளப்படும் என்று குளறுபடை செய்வதையும் பாருங்கள்.

சினைப் பெயர் முதலை யுணர்த்தினு லது சினையாகு பெய ரென்றும், காரணப்பெயர் காரியத்திற் கானு லது காரண வாகுபெயரென்றுங் கொண்டு சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் விருத்தியுரையில் சினையாகு பெயர்க்கு "மருக்கொழுந்து நட்டான்" "வெற்றிலை நட்டான்" என்பனவற்றையும் காரண வாகுபெயர்க்குத் "திருவாசகம்" "திரு வாய் மொழி" என்பனவற்றையும் உதாரணங் காட்டியிருக்கவும், சேனாவரையர் தொல்காப்பியத்தில் "இலை நட்டுவாழும்" 'பூநட்டு வாழும்' எனச் சினைப் பெயர் முதன்மேலும் என்று சினையாகு பெயர்க்கும் 'இக்குடம் பொன்' னெனக் காரணப்பெயர் அதனானியன்ற காரியத்தின் மேலும்" என்று காரண வாகு பெயர்க்கும் உதாரணங் கூறவும், இச் சேனாவரையரை யனுசரித்தே நச்சினார்க்கினி... ...லவும் இவற்றிற் கெல்லா மாறாகப் பாஷைக்கு முதற் கார... விருக்கும் எழுத்தைக் காரண வாகுபெய ரெனக் கூறாமல், சினை யாகு பெய ரெனக் கூறல், சொல் லிலக்கண உணர்ச்சி யின்மையைக் காட்டுகின்றது.

'இவர் மற்றொன்று சினை யாகுபெயராய் எழுத்தினு ணா... படும் பாஷை யென்றுங் கொள்ளக் கிடத்தலின்' என...

லேயே 'எழுத்து' காரணம் என்றும், அதனு ளுக்கப் படும் பாஷை காரியம் என்றும் கொள்ளக்கிடக்க, எழுத்து 'சினை யாகுபெயராய்ப் பாஷையென்றுங் கொள்ளக்கிடத்தலின்' என்று கூறல் தாமெழுதிய இரண்டொரு வரிகளிலும் தமக்கே இலக்கணங் கூறத் தெரியாதென் றன்றோ விளங்குகின்றது? இத்தகுதியையுடைய விவர்: பிறர்மாட்டு க் குற்றங் கூறல் என்னும்! "அகரம் அகரத்திற்கு முதலாதல் யாங்ஙனம்!" எனும் இழுக்குரை நாயகரவர்களால் யாண்டும் வரையப்பட்டில தாகலானும்" என்றார். 'எழுத்தெல்லா மென்றபோது அகரமும் அடங்கி நிற்கவும்' என்றவர் வரைந்ததினாலேயே 'அகரத்திற்கு அகரம் முதலாதல் யாங்ஙனம்?" என்னும் வினா அதில் அடங்கி நிற்பதை இப் பூர்வபட்சியார் உய்த்துணராமற் போயதும், உய்த் துணர்ந்து கூறியவரது கூற்றைக் கூர்ந்தறியாமற் போயதும் நுண்ணுணர் வின் மையே யாம். நாயகர்க்கு 'அகரத்திற்கு அகரம் முத லாதல் யாங்ஙனம்!' எனனும் வினாத் தோன்றாவிடின் எழுத்தெல்லாமென்றபோது அகரமுமடங்கி நிற்கவும்; அதனை வேறுபோல 'அகரமுதல வென்று கூறுவதென்னை யெனின்' என்று வரைவாரா? வரைந்ததினால் சோ. நாயகர்க்கு 'அகரத்திற்கு அகரம் முதலாதல் யாங்ஙனம்?' என்னும் வினாத் தோன்றியது திண்ணத்தினுந் திண்ண மெனக! வெள்ளரிப் பழத்திற்குப் பூண்கட்டுவதுபோலச் சோ. நாயகர் எழுதிய தொடரு க்கு இவர் பொருத்த மமைக்க முயல்வது,

> "குரங்கு நின்று கூத்தாடிய கோலத்தைக் கண்டே
> அரங்க முன்னி ருந்து பார்த்துக் கொண்டாடிய வதுபோல்
> கரங்கள் நீட்டியே பேசிய கசடரைக் கண்டு
> சிறங்க ளாட்டியே மெச்சிடு மறிவிலார் செய்கை."

என்னுஞ் செய்யுளுக் கிலக்காக வன்றோ விருக்கின்றது? "ஆசிரியர் பரிமேலழகரும் அவர் கருத்தறிந்து 'தமிழ் எழுத்திற்கே யன்றி வடவெழுத்திற்கு முதலாதல் நோக்கி எழுத்தெல்லா மென் றார்" என்றார். எழுத்தினு லாக்கப்படும் பாஷையை எழுத்து என்ற கருவி யாகு பெயரா லெனக் கூறத் தெரியாது, சினை யாகு பெயர் எனக் குளறுபடை செய்த இவர்க்கு 'வட வெழுத்திற்கும் அகரம் முத லாதலையுடைத்து' என்று கூறிய பரிமேலழகர் துணையாய தெங்ஙனே!

எப்பாஷைக்கும் தாய் ஸ்தானமாயுள்ள தேவ பாஷையான சம ஸ்கிருதத்தில் 'அகரம் முத லாதலை யுடைத்து' என்ற [illegible] த்தா னே ஏனைப் பாஷையிலுள்ள எழுத்துக்களுக்கும் 'அகரம் முதலாதலை யுடைத்து' என்னும் பொருள் உயத்து ணர்வைப்பாகத் தோன்று மாறு பரிமேலழகர் 'அகரம் வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கி' என்றார். இவரோ பாஷைக்கு அகரம் முதல் என்கிறார். அகரம் [illegible] முதல் என்பது சிறப்போ? எழுத்தினு லாக்கப் படும்

பாஷைக்கு முதல் என்பது சிறப்போ? புத்திமான்களே, சிறிது கூர்ந்து நோக்குங்கள்! அகரம் எழுத்திற்கு முதலென்றபோதே எழுத்தாலாக்கப்படும் பாஷைக்கும் முதலாதல் சொல்லாமலே விளங்க, இவர் எழுத்தினலாக்கப்படும் பாஷைக்கும் அகரம் முதல் என்று மிகைபடக் கூறல் பொருத்தமுடையதாம்மா? இவர், தம்முடைய குளறுபடியை யாசிரியர் பரிமேலழகர்மேல் ஏற்றப் பார்ப்பது கொடுமையினுங் கொடுமை! மிகக் கொடுமை!!

"ஆங்கிலேய இலக்கண வித்துவான் டாக்டர் பெயின் என்பவர் தாமியற்றிய அரிய இலக்கண நூலில், நம்மா லியன்றவரையில் நமது பாஷை யெழுத்துக்களின் முன்னைய வியல்பை நலம் ஆராயப் புகுவோமாயின் நாம் மூன்று முதன்மை யுயிர்களைக் காண்பேம். அவற்றி னின்றும் பல திரிவாய்ப் பல வெழுத்துக ளுண்டாயின' என்று கூறியதாய்க் கூறிப் பின்னர் "அகரத்தி னின்றும் பிற வெழுத்துக்கள் பிறந்தவாறு போலப் பிரமத்தி னின்றும் பல வுயிர் முதலியனவுந்தோன்றுமென்று கோடுமெனின்:—அறியாது கூடாயினுய், அ வென்னும் ஒலியினின்றும் இ, உ முதலிய பிறந்ததில்லை; அவையெல்லாம் இதழ், நா, பல், அணம் முதலியவற்றின் தொழிலால் வெவ்வேறு வகையவாயின; வாயைத் திறந்தே ஏனைய வெழுத்துக்களும் ஒலிக்க வேண்டுதலான், திறந்த மாத்திரையின் உதிக்கும் அகரத்தை நிமித்தகாரணமாகமுதல் வைத்ததன்றி,முதற்காரணமாக முதல் வைக்கப்பட்டதல்ல" என்றார். டாக்டர் பெயின் என்பவர் மூன்று முதன்மை யுயிர்களைக் காண்போமென்றும், 'அவற்றினின்றும் பலதிரிவாய்ப் பலவெழுத்துகளுண்டாயினஎன்றும்கூறி,மூன்று உயிரெழுத்திற்கும் மற்ற வெழுத்துகளுக்கும் காரண காரியத் தன்மை சாதித்தார். அவர் சாதித்தது 'திரிவாய்' என்பதினுலும், 'உண்டாயின்' என்பதினுலும் நன்கு புலப்பட, அகரம் ஏனை யெழுத்துகளுக்கு நிமித்த காரண மென்று கூறும் முருகவேள் என்னும் இப்பூர்வ பட்சியார் மூன்றுயிரெழுத்திற்கும் ஏனைய வெழுத்துகளுக்கும் முதற் காரண காரியசம்பந்தங் கூறும் டாக்டர் பெயின் என்பவரைத் துணையாகக் கோடல், "அடியுண்டோடுவோன், ஆளறியாது அடிப்போனையே துணைகொண்டதற்கு இனமாயிருக்கிறதன்க. சித்தாந்தசேகரம் 14 ம் பக்கத்தில் "அகரவுயிரொன்றே பலபட விரிந்ததல்லது அவைகள் வேறல்லாமையால்" என்றும், 15 ம் பக்கத்தில் "இதுகாறுங் காட்டி [illegible] யங்களால் அகரமும் பிறவுயிர்களும் ஒன்றென்றும், [illegible] மெய்களும் வேறென்றும்" என்று கூறிய சோழசுந்தர [illegible] யகரது கூற்றை [illegible] க்குமாறு, 'அ வென்னும் ஒலியினின்றும் இ, உ முதலிய பிறந்ததில்லை' என்று இப்பூர்வ பட்சியார் மறுப்பது அவர்மேற் கொண்ட வயிரத்தை நன்கு விளக்க வாக்கும்! இவர் அவருக்குத் துணையாய் வந்தமை உண்மையாயின், அவர் அகரத்தி னின்று ஏனைய வுயிர்கள் பிறந்தன] என்று கூறுவதை

மறுத்து, 'அ வென்னும் ஒலியி னின்று இ, உ முதலிய பிறந்த தில்லை' என்று கூறுவரோ? கூறினமையான் அவர் கூற்றை மறுக்கவே இவர் வெளிவந்தா ரென்பதற்கு ஆசங்கை யென்னை? சோமசுந்தர நாயகர் உட்பகையா யுள்ள முருகவேளைத் துணையாகக் கொண்டதினு லன்றோ,

"சீரிடங்காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு"

என்னும் குறளுக் கிலக் காக அம் முருகவேளாலேயே சமயத்தில் மறுக்கப் பட்டார் பாவம்! இனிமே லாகிலும் இப்படிப் பட்டவரது நேசத்தை அவ்ர் விட் டிருப்பாராக. உந்தியிற் றோன்றிப் புறத்தே புலப்பட்டு ஒலிக்கும் ஒலியில் அகர வொலி முன்னுசவும், அதிற் சிறிது வேறுபட்ட இகர வொலி பின்னுகவும், அவ்விரண்டினும் சிறிது வேறுபட்ட உகர வொலி அதன் பின்னுகவும் முறையே யுண்டாதல் அநுபவ சித்தமா யிருக்க, 'இவர் அ வென்னும் ஒலியி னின்றும் இ, உ முதலிய பிறந்ததில்லை' யென்பது நூலினின்றும் ஆடை வரவில்லையென்பதற்கு இனமாயன்றோ விருக்கின்றது? அ வென்னும் ஒலியி னின்றும் இ, உ முதலிய பிறந்தன வென்பது: "குறிலினது விகாரமே நெடி லாதலால் குறில் முன்னிற்றலின் சிறபபி னென்றும், நெடில் இனமாய்ப் பின் னிற்றலின் இனத்தி னென்றும், நாத மாத்திரையாய் எல்லா வெழுத்திற்கும் காரணமாய் முன் னிற்றலின் அம் முத லென்றும்" என்றுள்ள நன்னூல் விருத்தி யுரையினும், "ஆதனாதியும் உதான னதியுமா, நாதம் உரங் கண்டந் தலை யில் முற்றுப் பல் லிதழ் நா மூக் கண மைந் தொழிலா, லெல்லா வெழுத்தும் பிறக்கு மென்ப" என் றுள்ள பேரகத்தியச் சூத்திரத்தினும், "மொழிக் காரணமா நாத காரிய வொலி, எழுத்து" என்றுள்ள இலக்கண விளக்கச் சூத்திரத்தினும், "உந்தி முதலா முந் வளி தோன்றி" என்றத் தொடக்கத்தனவாகிய தொல்காப்பியச் சூத்திரத்தினும், அத னுரையான நச்சினர்க் கினியத்தாலும், ஆகமம் பூரணத்தாலும் பெறப்படுதலின், அவையிற்றிற் கெல்லா மாறுக அ வென்னும் ஒலியி னின்று இ, உ முதலிய பிறந்த தில்லை' என்னும் முருகவேள் கூற்றுப் போலிக் கூற்றென்று விடுக்க. அ வென்னும் ஒலியி னின்று இகர முதல னகர வீருயுள்ள வெழுத்துகள் யாவும் பிறந்தன வென்று சாதித்தோமாகலின், இது கொண்ட பிரமத்தி னின்றும் யாவும் பிறந்தன வென்று கொண்டாம். இது விஷயமாக ப[illegible] என்னும் புஸ்தகத்தில் விரிவாய்ப் பேசப் பட்டிருக்கின்றமையால், அது பற்றி மீண்டு விரிக்காது விட்டா மென்க

"அ வென்னும் ஒலியினின்று இ, உ முதலிய பிறந்ததில்லை; அவை யெல்லாம் இதழ், நா, பல், அணம் முதலியவற்றின் தொழிலால் வெவ்வேறு வகை யாயின" என்றவர் 'வெவ்வேறு வகையா

யின' இவை யென்று விளக்காமையின் இ, உ முதலியவாக வெவ் வேறு வகையாயின அ என்னும் ஒலியே யென்று மேற் கூறிய பிர மாணங்களுக் கியையப் பெற்றும். இ, உ முதலிய இதழ், நா, பல், அணம் முதலிய தொழிலால் ஆகின்றமையின், இவர் 'அவை யெல் லாம்' என்பது எவை? 'அவை யெல்லாம்' என்பது இ, உ முதலிய வெனின், இதழ், நா முதலிய பல் வகைத் தொழிலால் இ, உ முதலியவாக ஆதற்கு முன் நாத மாத்திரையான அகரமாக வன்றி வேறு வகையாய்க் கொள்ளுவதற்கு ஏது சிறிது மின்றே. இன்றாக 'அ என்னும் ஒலியி னின்றும் இ, உ முதலிய பிறந்த தில்லை' என்று இவர் கூறுதல் இவர்க்கே கூற்றுகின்றது. இப் பூர்வ பக்ஷியார் 'அ வென்னும் ஒலியில் இ, உ முதலிய பிறந்த தில்லை' என்று கூறினு லும் அவர் கூற்றில் அ என்னும் ஒலியி னின்றே இ, உ முதலிய பிறந்தன வென்று பொதிந்து கிடந்தலுக்கு யாது செய்வது?

'திறந்த மாத்திரையின் உதிக்கும் அகரத்தை நிமித்த காரண மாக முதல் வைத்த தன்றி, முதற் காரணமாக முதல் வைக்கப்ப ட்ட தல்ல' என்பதி னுபாசத்தையும் விளக்குவாம்.

திறந்த மாத்திரையி னுதிக்கும் அகரம் பல்வகைத் தொழிலை நிமித்தமாகப் பெற்று இகர உகர முதலியனவாகக் காரியப் படுதல் "எல்லாவெழுத்தும் வெளிப்படக்கிடந்து" என்றத்தொடக்கத்தவாய் தொல் காப்பியப் புறனடைச் சூத்திரத்தினும், "எடுத்தல் படுத் தல்" என்றத் தொடக்கத்தவாய நன்னூல் புறனடைச் சூத்திரத்தி னும்,ஏனைய சூத்திரங்களாலும் கொள்ளக்கிடக்க,இவர் தொழிலை நிமித்தமென்றுகூறாமல் இகர உகர முதலியவற்றிற்கு முதற்காரண மானஅகரத்தை நிமித்தகாரணமென கூறலென்னே! நிமித்தகாரண னாகிய குயவன் காரியமாகிய குடத்தில் வியாபியாமலிருப்பதுபோல, நாதமாத்திரையான அகரம் ஏனையெழுத்துகளில் வியாபியாம லிருந் தாலன்றோ அது பொருந்தும்? தன் காரியமாகிய குடத்தில் மண் வியாபித்திருப்பதுபோன்று,நாத மாத்திரையான அகரம்,தன் காரிய மான எழுத்துகளில் வியாபித் திருத்தலானும், மண்ணை யெடுத்து விட்டால் குடமென்பதற்கு பொருளில்லாமைபோல, நாதமாத்தி ரையான அகரத்தை நீக்கிவிடின்,ஏனைய வெழுத்துகள் அபாவமாய்ப் போகின்றமை யானும் நாத மாத்திரை யான அகரமே ஏனைய வெழு த்துகளுக்கு முதற் காரண மென்பது பசுமரத்தாணியா மெனக.

"முதற்காரணமாயின் அவ்வகரத்தினின்று மேனையெழுத்துகள் பிறத்தல் வேண்டுதலி னென்க. அகரத்தொடு நிகழும் அங்காப் பின் றேல், ஏனைய எழுத்துக்க ளொலிக்கப்படா வாறுபோல கடவு ளின் றேல் உலகுயிரு மில்லையாம். என்றால் மற்றை யெழுத்துகள் நிலை பெறுதற்கு ஒரு தலையாக இன்றியமையாதா யுள்ளது அகரம்போல உல குயிர் நிலை பெறுதற்கு இன்றியமையாதாயுள்ள அரியபொருள் கடவுள் என்பதாம்"

என்றார்.

அகரம் ஏனை யெழுத்துகளுக்கு நிமித்த காரண மென்று இப்பூர்வபட்சியார் கூறியது நிலைபெறாது, மேற்காட்டி யுள்ள நியாய முட்டத்தால் முதற்காரணமென்று நிலைபெற்றமையின், அவ்வகரத்தை யுவமானமாகக் கொண்ட கடவுளும்

"அருளுருவாம் பரமசிவ னனந்தசத்திக்காதாரமாக வமர்ந்திருப்பதாலே
சருவசககாரணமா மவ்வீசற்நச்சமயேனு மல்லத்வற் கதிகமேனும்
ஒருபொருளு மிலையதனனன்ஞேன்றுனேயோதுமுபாதாநநிமித்தங்களாவன்
கருதியவிவ்வீசற்குமேலாய் வேறோர்காரணமு மொருக்காலு மெங்குமில்லை"

என்னும் சிவரகசிய ரிபுகீதைச் செய்யுளின்படி சராசரமா யுள்ள உலகிற்கு முதற் காரணமா யிருக்கிறார் என்பது பெற்றாம். நிற்க; கடவுளைக் கேவலம் நிமித்தகாரணராகச் சொல்லி, அவரால் சிருட்டிக்கப்பட்ட வுலகில் அக்கடவுள் வியாபிக்கின்றா ரென்று சொல்லும்பக்ஷத்தில் கேவலம் நிமித்தகாரணனான குயவனுங் குடத்தில் வியாபித் திருக்க வேண்டும். அவ்வா றின்மையால் இவர் கூறும் கடவுள் உலகில் வியாபித்த தில்லை யென்பது பெற்றாம். ஆகவே, இவரது வேத விரோத கேவலம் நிமித்த காரணக் கடவுள் அவ்வியாபகராயும் கண்டராயும் ஆகின்ற தோஷத்தைப் பெறுகின்றாரென்க.

நிமித்த காரணரா யிருந்து கடவுள், உல குயிர்களுக்கு இன்றி யமையா திருக்கின்றார் என்கிறார். காரியமாதற்கு முதற்காரணமும இன்றி யமையாததுதான், நிமித்தகாரணமும் இன்றி யமையாதது தான். காரியமான குடமாதற்கு முதற்காரணமான [illegible] இன்றி யமையாததுதான், நிமித்தகாரணனான குயவனும் இன்றி யமையாத வன்றான். இவர் குயவனிடத்தில் கடவுளை வைத்து அக்கடவுளை இன்றி யமையாதவ ரென்று கூறி, இவ்வுவமேயத்துக் கியைந்தபடி இ, உ இவற்றினுக்கு அ நிமித்த மென்கிறார். அப்படியானால் இ, உ இவை கட்கு முதற்காரணம் யாது? நாதத்தைக் கூறின், அது கூடாது;

ஏனெனின் இகர உகரங்கள் அகரத்தின் காரியமென்று முன்பே தீர்மானித் திருக்கின்றமையானும், முதல் வாதி யான சோம சுந்தர நாயகரும மற்ற வுயிர்களுக்கு அகரம் முதற் காரணமென அச் சித்தாந்த சேகரத்திலேயே யொப்புக்கொண் டிருக்கின்றமையானு மென்க. ஆகையால் இகர உகர மாதிகட்கு அகரம் நிமித்த காரண மாகாது. இகர உகர மாதிகட்குக் காரணமும், நாதத்தின் காரியமு மான அகரம் அவ் இகர உகர மாதிகட்கு நிமித்த காரண மாதல் கூடாது. ஆடையின் காரணமாயும் பஞ்சின் காரியமாயுமுள்ள நூல் அவ்வாடைக்கு நிமித்த காரண மாகாமைபோ லென்க. இகர உகரங்கட்கு அகரத்தை நிமித்த காரணமாய் வைத்து உவமானங் காட்டி, இவ் வுவமானத்துக் கியைந்தபடி உலகுக்குக் கடவுளை நிமித்தமென்று சொல்லுகின்றா ரன்றோ? அப்படியானால் இகர உகரங்கட்குக் காரணமாயும் நாதத்திற்குக் காரியமாயும் அகரம் இருப்பதுபோலக் கடவுளும் உலகுக்குக் காரணமாயும், மாயைக்குக் காரியமாயு மிருத்தல் வேண்டும். இருக்கின் மாயை சடமாகலின் கடவுளும் சடமாயும், காரண காரியம் அபின்ன மாகலின் மாயையும் கடவுளும் அபின்னமாயு மிருத்தல் வேண்டும். கடவுள் சித்தே யென்னின் கடவுளின் காரியமான உலகும் சித்தா யிருத்தல் வேண்டும். இந்த உவமேயப்படி மண்ணின் காரியமாயும் குடத்தின் காரணமாயும் குயவ னிருத்தல் வேண்டும்.

உலகிற்குக் கடவுளை முதற் காரணஞ் சொல்வது இவர்க்கு விரோதமாயினும் அவ்வாறு சொல்லுமாறு வலிய வந்து அகப்பட்டுக்கொண்டார். இவ் வளவு தோஷங்கள் நிகழ்வதால் இ உ க்களுக்கு அகரத்தை நிமித்தகாரணமாயும், அதுபோல உலகுயிர்களுக்குக் கடவுளைக் கேவலம் நிமித்த காரணமாயும் கூறுவது பொருத்த மின்றென் றறிக.

'கடவுளின்றேல் உலகுயி ரில்லையாம்' என்ற வாக்கியத்தைப் பின்னும் ஆராய்வாம். நிமித்த காரண னான குயவ னில்லாவிடில் காரியமான கு மில்லாமைபோல நிமித்த காரணனான கடவுளில்லாவிடில் காரியமான உலகில்லாவிடினும் உயிரு மில்லாமற் போதல் யாங்ஙனம்? உயிர் காரிய மன்று செல்வாரேல், அதற்குக் காரணம் யாது? மாயையாகிய முதற் காரணத்தைக் கொண்டு கடவுள் உலகைச் சிருட்டிப்பதுபோலஎந்த முதற் காரணத்தைக் கொண்டு உயிரைச் சிருட்டித்தார்? மாயையை யென்னின் அப்போது உயிர்

காரியமாய் முன்னின்மையாய்ப் போய், உயிர் அநாதி யென்னும் சொல் எடுபட்டுப் போம். அன்றிச் சடமான மாயையி னின்றும் சித்தாகிய உயிர் தோன்றுவது கூடாது. சித்தினின்றும் சடமும், சடத்தினின்றும் சித்தும் தோன்று வென்பது பூர்வ பக்ஷிகளுடைய ஆசங்கை.

"பிறவெழுத்துக்கள் பிறத்தற்கு வினைமுதலாய் நின்ற அகரம் இகரத்தோடுகூடி எகரத்தையும், உகரத்தோடு கூடி ஒகரத்தையும், இகரத்தோடும் ய வொடும்கூடி ஐகாரத்தையும், உகரத்தொடும் வ வொடுங் கூடி ஔகாரத்தையும் இயக்கி ஏனை மெய்களோடும் புணர்ந்து அவற்றையு மியக்கித் தன்னுலாய பயன் விளைத்தாற் போலக் கடவுளும் உல குயிரிற் கலந்து அவற்றை யியக்கிப் பெறும் பயன் பயந்தவ ...ணர்க"

என்றார்.

எகரம், ஒகரம், ஐகாரம், ஔகாரம் என்னும் இந்நான்கினையும் நன்னூல் விருத்தி யுரையில் சங்கர நமச்சிவாயப் புலவர் "எ, ஒ, ஐ, ஔ என்னும் நான்கினையும் வடநூலார் சந்தியக்கரம் என்பர், கையடனார் 'நரமடங்கல்போ' லென்றுவமையுங் கூறினர்" என்றும், சுப்பிரமணிய தீக்ஷிதர் பிரயோக விவேகத்தில்" இனிச் சந்தி யக்கரமாவது 'அகர விகரம் எகார மாகும்' 'அகர வுகர மொகர மாகும்' இகர வுகர மென்னு மிவற்றோ ...காரம் ஐ ஔவாகவு முரித்தே' இவ்வுரைச் சூத்திரங்களால் ஈரெழுத்தாகிய சந்தியக்கரமென்றும் ஓரெழுத்தாகிய ...காக்கரம் என்று மறிக"

என்றும்,

உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் தொல்காப்பியம் மொழி மரபின்கண் நிரலே "அகர ...கர மைகார மாகும்" "அகர ...கர மௌகாரமாகும்" என்னுஞ் சூத்திரங்களுக்குப் பொருள் கூறுமிடத்து, "போலி யெழுத்தாமா றுணர்த்து, அகரமு மிகரமுங் கூடச் சொல்ல ஐகாரம்போல வரும், அது கொள்ள..." என்றும், "அகரமும் உகரமுங் கூட்டிச் சொல்ல ஔகாரம்போல ...கும், அது கொள்ளற்க" என்றும் கூறி யுள்ளவற்றால் எல்லாம் மாறாக எ, ஒ, ஐ, ஔ என்பன தனித்தனி பிறந்த..ம் வேறு எழுத்துகளோடு கூடி அவற்றை யியக்குவதாக இவர் கண்ட இலக்கணம் எவ்வுலகத்திலுள்ளதோ? அது இவர்க்குமாத்திரம் தெரியும்போலும்! எ, ஒ, ஐ, ஔ என்னும் நான்கினையும் சந்தியக்கரம் என்று சிலரும், ஐ, ஔ

என்னும் இரண்டினையும் போலி யெழுத்தென்று சிலரும் புகன்ற தற்கு வேறுபட்டுப் பேசுமிவர்: எ, ஒ, ஐ, ஔ என்னும் எழுத்துகள் தனித்தனி யிருக்க அவற்றை அகரம்: இகர முதலிய எழுத்து களோடு கூடி யியக்குவதற்கு இலக்கியங் காட்டுவாராக.

"பரமார்த்தத்தில் தான் பொய்யெனத் தள்ளவிருக்குந் தேவர் குறளுக்குப் பொருந்தாவுரை கூறவந்தது பொய்ப்பொருட்கு யாது கற்பிக்கினும் தவறில்லையெனும்தங்கொள்கையைத்தழுவிப்போலும்"

என்றார்.

பாரமார்த்தத்தில் சித்கன மாகிய பிரமத்தைத் தவிர வேனைய வெல்லாம் மித்தை யென்பதற்குக் காரணம் பல புத்தகங்களிலும் பல பத்திரிகைகளிலும் அத்வைதிகள் எழுதி யிருப்பதற்கு எதிர் மாற்றம் பேசாதொழிந்த வேதவிரோத மாயாவாதிகள்,

சர்வசாரோபநிஷத் 10.

"பிரமம் எப்படிப்பட்டது ?

எவ்வித வுபாதியுமற்றது, நிர்விசேஷ சின்மாத்திரம், சூக்ஷ்மானது; இரண் டாவதற்றது, ஆநந்தமானது, மாயையற்றது எதுவோ அதுதான் பிரமம்...... ....சுத்தம் பாரமார்த்திகம்"

என்றும்,

சூதசங்கிதை பஞ்சாக்கர மந்திரம்.

இல்லையிருப்பதுபொய்மெய்விளக்கமஃதின்மையெனவிவைமுன்னகச்
சொல்லும்விவகாரமெலாமாயையினூற்றானின்றசொரூபமெனன்றும்
வல்லசிவன் கற்பித்தமாயாகாரியப்பவஞ்[illegible]தோற்றம்
செல்லலுறுவிவகாரதிசையினன்றிப்பரமார்த்ததிசையினில்லை. (கா)

என்றும்,

விஷ்ணுபுராணம் நான்காம் அத்தியாயம்.

"நீ யொருவனே பாரமார்த்த மாகின்றாய்."

என்று முள்ள வேதபுராணப் பிரமாணங்களுக்கு விரோதமாகப் பரமார்த்த நிலைமையை யிகழ்வது அவைதிக மதத் தடிப்பே யாம். திருக்குறளில்,

"பொருளல்லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானு மாணாப் பிறப்பு"

என்றும்,

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று முள்ள பிரமாணங்களை யிவர் கேட்டேனு மிருந்தால் பரமார்த்தநிலைமையைப் பரிகசியார் பரிகசியார்!! தாம் பேசப்புகுந்த நூலைப் படியாமலே பேசும் படிப்பிலிகள் கூற்று அந்நூலோடு மாறுபடு மென்பதற்குச் சான்று இம்முருகவேள் கூற்றே சாலுமா மென்க.

'அகரமுதல' வென்னும் குறளைப்பற்றி யிதுகாறும் எழுதிவந்த விஷயத்தினல் ஓர் நாகை வாதியார் எழுதிய வுரை பொருத்தமாயும்; பொய்ப் பொரு ளிது, மெய்ப் பொரு ளிது என்று பதார்த்த விசாரஞ் செய்யாது அவ்விரண்டையும் மெய்ப்பொரு ளெனக் கருதும் பூர்வ பட்சியார் கூறிய வுரை ஆபாசத்தினு மாபாச மாயும் முடிந்தமையின், முருகவேள் எழுதிய தவறுரை தவறியே முடிந்ததென்க.

தொடர்மொழி பல பொருள் படுதலை யேதுவாகக் கொண்டு "ஓர் நாகைவாதி" என்னுந் தொடர் மொழியைத் தம்மனம் போனவாறு பல பொருட்படுத்தி "நாகைவாதி யென்பது நாகையை வாதிப்பவர், நாகைக்கு வாதி" என்றத் தொடக்கத்தனவற்றை யெழுதிக் களித்த இப் பூர்வ பட்சியார், 'நாகைவாதி' என்பதை நாகையிலிருக்கும் வாதியென ஏழாம் வேற்றுமை யுருபும் பொருளும் உடன்றொக்க தொகையாக இடரின்றித் தெளிவுறப் பொருள் கொள்ளத் தெரியாததுடன் யாருக்கு வாதிஎன்னும் வினவுக்கு விஷயத்தொடர்பால் சித்தாந்த சேகர நூலுடையார்க் கென்னும் விடையினையும்,

"பொன்பெறுங் கற்றூன் புகழ்பெறும் நற்கவி
யென்பெறும் வாதியிசைபெறும்"

என்னுஞ் சங்கச்செய்யுளின்படி வாதியிசை(புகழ்)பெறுவானென்பதையும் அறியும் விரகின்றிப் போனார்பாவம்! அறியும் விரகிருந்தால் இவ்வா றெழுதி யலமருவரோ!

"ஒருவன் வரம் பிகந்து போய் முன்னர் வழக்குத் தொடுத்தல் கூடாதென்னும் நீதியை 'வாதுமுற்கூறேல்' என்பதாய் ஔவையார் உரைத்தா ராதலின், அதைக் கருதாது நண்பர் இழுக்கு வழக்குத் தொடுத்ததே இவரது துடுக்குத் தன்மையைக் குறிப்பதாயிற்று" என்றார்.

சாஸ்திர வரம் பிகந்து பிதற்றுன் கூற்றுக்குப்பின்னிட்டது நின்று கிறிஸ்தவர், பௌத்தர், நாஸ்திகர், பிரம சமாஜிகள் முதலியவர் போன்று வருணாச்சிரம தருமமின்றென்றும்,வேதம் வியபிசார நூலென்றும், பசு நூலென்றும், உலக நூலென்றும், மோகநூலென்றும்,பந்த நூலென்றும் இன்னும் இவ்வாறு பலவுமாகச் சொல்லி, வேத வேதாந்தங்கட்கு மாறான நடவடிக்கையுள்ள சோமசுந்தர நாயகர் எழுதியதையும் சொல்வதையும் படித்த கேட்ட பத்திமர்கள் மயங்கா வண்ணம் வைதிகராகிய ஓர் நாகை வாதியார்,அதை மறுத்துவரல் துடுக்குத் தன்மையாவ தெங்ஙனமோ! சோம. நாயகர் சாஸ்திர மரியாதையை யறியாமலும், பலாபலம் தெரியாமலும் பல வேதாந்திகளோடு

முன்னர் வழக்குத் தொடுத்துப் பின்னர்த் தோல்வி யுற்றுத் தலை மறைந்தொழுகுவதைப் பலரறியுமாறுவெளிப்படுத்துவான் வேண்டி அவர்பேரி லுள்ள குற்றங்களை யெல்லாம் இப்பூர்வ பக்ஷியார் நாகை வாதியார் பேரில் ஆரோபிக்கின்றார் போலும்! இதனால் சோ. நாயகர் பேரி லிவர்க் குள்ள அழுக்காறு நன்கு புலப்படுகின்றது. இன்றேல் அவர் செய்கையை யிவர் பேரி லாரோபிப்பதற்கு ஏது என்னை? சோ. நாயகர் அத்வைதிகளை முன்னர்த் தூஷித்திருத்தலால் அவரே 'வாதுமுற்கூறேல்' என்னும் ஔவை வாக்கியத்தைக் கடந்தாரென்பதற்கு யாது மாசங்கை யின்றென்க. முன்னர் வாது கூறிய அவரோடு பின்னர் ஓர்நாகை வாதியார் வாதுகூறல் குற்ற மாகாதே. ஔவையார் முன்னர் வாதுகூறேல் என்றுபொருள்பட "வாதுமுற் கூறேல்" எனக் கூறினாரே யன்றிப் பின்னர்க் கூற வேண்டா மென்று கூறவில்லையே. சமயாசாரியர்கள் பின்னர் வாது கூறுவிடில் சமயங்கள் நிலைத்திருக்குமோ? இதைச் சற்றுக் கூர்ந்து நோக்குக.

"நாம் அவர் வரைந்து வெளியிட்ட விஷயங்களைக் கொண்டு அவரை மாயாவாதி யென்றும், கையொப்பத்தைக் கொண்டு சூனிய வாதி யென்று மறிந்தாம்"

என்றார்.

ஓர்நாகை வாதியார் எழுதிய விஷயம் இவ்விவாதத்தினால் யுக்தியனுபவ முள்ளதாயும் சுருதி சம்மத மாயும் மாயையைத் தும்சஞ் செய்வதாயும் இருத்தலின், அதைமறுக்கவெழுந்த முருகவேளே மாயாவாதியாயும் * "மாயாவாத சைவசண்ட மாருதம்" 174 வது 175 வது பக்கங்களிற் காட்டியவாறு நாஸ்திக சூனியவாதியாயும் ஆகின்றாரென்றறிக.

"நாகைவாதி .... நாகை வாதியராயினார்"

என்று முடிவில் கூறினார்.

நாகைவாதி யென்பதி னீற்றிலுள்ள இகரம் ஈகாரமாதற்கு ஈண்டு விதி யேதுமின்றியிருக்க, வீணே இலக்கண விரோதமாக இகரத்தை ஈகாரமாக்கி யிகழ்வது நன்றாகா. அக்கிரமத்துக்கு முற்பட்டு வரும் இத்தகைய முருகவேளது நாவும் கையும் வாயும் வைதிக மதத்தை யிகழும் பாவ வலியான் தீமை யுற்றிருக்கின்றமையின், அத்தகைய நாவும் கையும் வாயும் தீமையுறுதலின்றி, நன்மை யுறுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றனம். சுபம்.

---

* (1) "சங்கராசாரியர் அவதாரமகிமை" யில் 7-வது 8-வது பக்கங்களில் பேசிய காரணகாரிய வாதத்தில் இவரது கடவுள் சடமாயும், அசத்தாயு முடிவதால் இவரது மதம் நாஸ்திக மதமாம்.

(2) "அத்வைத தூஷண பரிகார" த்தில் 20-வது பக்கத்தில் மறுத்த மறுப்பின்படி நீர் ஸ்தானத்தில் உயிரையும், நிழல் ஸ்தானத்தில் சிவனையும் இவரது சிவஞானசுவாமியார் சொல்வதால் சிவன் பொய்யாய் அது காரணமாக இவரதுமதம் நாஸ்திக மதமாம்.

(3) ஷை புத்தகம் 24-வது பக்கத்தில் மறுத்தபடி இவரது மதத்தில் உயிர் பரிபூரணமாகலின் சிவனிருக்க விடமில்லாமற்போய், அதுகாரணமாகக் கடவு ளில்லையென்று சொல்வதற்கிடமாய் இவரதுமதம் நாஸ்திகமதமாம்.

(4) ஷை புத்தகம் 50, 51, 52-வது பக்கம்வரையில் மறுத்தபடி, ஒன்று பலவானால் ஒன்று கெட்டே பலவாக வேண்டுமெனச் சோமசுந்தர நாயகர் சொன்னபோது அங்ஙன மாயின், திருவிளையாடற் புராணத்திற் கூறிய வாறு, சிவன் பன்றியாங்கால் சிவன் கெட்டுத்தானே பன்றியாக வேண்டுமெனவும், பன்றி காரியமானதாலும் காரியம் அழிதல் மாலையதாதலாலும் பன்றி அன்றே யில்லாமற் போயிற்றாதலாலும் காரியமான பன்றி யில்லாமற் போயிற்றென வும் சொல்லி, அது காரணமாகக் கடவுளில்லையென்று தீர்மானித்திருப்பதால் அது காரணமாகவும் இவரது மதம் நாஸ்திக மதமாம்.

(5) ஷை புத்தகம் 82வது முதல் 86வது வரையில் கண்டித்தவண்ணம் நீர் ஸ்தானத்தில் உயிரையும் கடல் ஸ்தானத்தில் சிவனையுஞ் சொல்வதால் நீரையின்றிக் கடலென்னுஞ் சொற்குப் பொரு ளில்லாமைபோல வுயிரையின் றிக் கடலென்னும் சொற்குப் பொருள் இல்லாமற் போகின்றது. அதுகாரண மாகவும் இவரது மதம் நாஸ்திக மதமாம்.

(6) "பதிபசுபாச வாத"த்தில்34ம் பக்கத்தில் பழத்திற் சுவைவியாபித்த வுவமானப்படியும இவரது மதம் நாஸ்திக மதமாம்.

(7) ஷை புத்தகம் 37ம் 38 ம் பக்கத்தில் பாலில் நெய் வியாபித்த வுப மானத்தில் மறுத்தவாறும் இவரது மதம் நாஸ்திக மதமாம்.

(8) ஷை புத்தகம் 44, 45, 46ம் பக்கங்களில் சூரியன், ஒளியில் வியா பித்த வுபமானத்தில் கண்டித்தபடியும் இவரது மதம் நாஸ்திக மதமாம்.

(9) சபாபதி நாவலர் சிவம் அளவைகளான் அறியப்படல் வேண்டு மெனக் கூறியதை வேதாந்த சங்கை நிவாரணம் 42 முதல் 50வது பக்கவரை யில் கண்டித்தபடி எது அளவைகளான் அறியப்படுமோ, அது சடமாயும் அசத்தாயும் போமாகலின், அது பற்றியும் அவரது மதம் நாஸ்திக மதமாய் அவரைச் சார்ந்த இவரும் நாஸ்திகராய் அது காரணமாக இவரது மதமும் நாஸ்திக மதமாம்.

(10) இவர் பதி பசு பாசங்கள் தனித்தனிச் சத்துப்பொருள் எனக் கூறுகின்றமையின் அதுபற்றி இவரது பதி, மூன்றி லொரு பங்கு இடத்தைப் பெற்று, அது காரணமாக இவரது மதம் மூன்றி லொருபங்கு ஆஸ்திகமும், இரண்டுபங்கு நாஸ்திகமுமாய் முடிகின்றமையின், அது பற்றியும் இவரது மதம் நாஸ்திக மதமாமென்க. (இவ்விஷயம் வேதாந்த சங்கை நிவாரணத்தின் கடைசியில் "அஸ்திக நாஸ்திகம்" என்னும் விஷயத்தில் தெளிவாய் விளக் கப்பட் டிருக்கின்றது.)

இது

துவிதமத திரஸ்காரியால்

இயற்றப்பட்டு.

சென்னை:

மதராசு ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1897.